பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**22 06 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச யோகா தினம் உலகளாவிய கொண்டாட்டமாக மாறியது ஊக்கமளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. திருவள்ளூர் அருகே தனியார் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமோனியா கசிவால் அப்பகுதி மக்கள் மேலும் பாதிக்காத வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளுக்கு, எம்ஆர்ஐ ஸ்கேன் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதில், தர நிலைகள் முழுமையாக பின்பற்றப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் ஐந்து மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா, **3-2** என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சர்வதேச யோகா தினம் உலகளாவிய கொண்டாட்டமாக மாறியது ஊக்கமளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், யோகா தினம், உலகம் முழுவதும் மறக்க முடியாத கொண்டாட்டங்களுடன் கூடிய நாளாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதை உலகளாவிய நிகழ்வாக மாற்றிய மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியத்தை நோக்கிய முயற்சியில் பல்வேறு நாடுகளை சேர்ந்த மக்களை யோகா ஒருங்கிணைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

யோகாவை அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மக்கள் மேற்கொள்ள இந்த தினம் மேலும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்திருப்பதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக் கசிவில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து மிகுந்த வேதனையளிப்பதாகவும், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிப்பதாகவும், காயமடைந்தோர் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதனிடையே திருவள்ளூர் அருகே தனியார் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமோனியா கசிவால் அப்பகுதி மக்கள் மேலும் பாதிக்காத வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு

மேற்கொள்ள வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இச்சம்பவம் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உயரிய சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் மற்றும் மாவட்ட ஆட்சியர் திருமதி கவிதா ஆகியோர் விபத்து நிகழ்ந்த தொழிற்சாலையில் ஆய்வு மேற்கொண்டனர்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. முகமது பர்வேஸ், தொழிலாளர் நலன் தொடர்பான விதிகள் மீறப்பட்டதா என்பது குறித்து துறை ரீதியான விசாரணை நடைபெறுவதாகவும், அந்த தொழிற்சாலையை மூட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட அனைத்து மாநிலங்களின் முன்னேற்றமும் அவசியமானது என்று தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

தெலங்கானா மற்றும் மேற்குவங்க மாநிலங்கள் உருவான தினத்தையொட்டி ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

மாநிலங்களுக்கிடையே கலாச்சார பரிமாற்றம் நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்தும் என்று அவர் கூறினார்.

பல்வேறு இந்திய மொழிகளைக் கற்றுக்கொள்வது தேசிய ஒருங்கிணைப்பையும், கலாச்சார புரிதலையும் மேம்படுத்தும் என்று திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் குறிப்பிட்டார்.

<<<>>>

அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உணவின் அளவையும் அதிகரிக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் பள்ளி ஒன்றில் காலை உணவு

திட்டத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் அதிர்ச்சியும், வேதனையும் அளிப்பதாக கூறியுள்ளார்.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளுக்கு, எம்ஆர்ஐ ஸ்கேன் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதில், தர நிலைகள் முழுமையாக பின்பற்றப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் கூறியுள்ளார்.

திருச்செங்கோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் அரசு மருத்துவமனைகளுக்கு, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மூலமாகவே மருந்துகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படுவதாக கூறினார்.

**M.R.I.** இயந்திரங்கள், ஐரோப்பிய தரநிலைகள் மற்றும் அமெரிக்க தர நிலைகள் அடிப்படையிலேயே வாங்கப்படுவதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக வெளியான தகவல்கள் தவறானவை என்றும், மருத்துவத்துறையில் எந்த முறைகேடும் நடைபெறாது என்றும் திரு. அருண்ராஜ் கூறினார்.

<<<<>>>>

திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை உடனடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தஞ்சாவூர் மாவட்டத்தில திறந்தவெளி நெல் சேமிப்புக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சத்திற்கும் அதிகமான நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணானதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

நெல் மூட்டைகளை உரிய நேரத்தில் அரவைக்கு அனுப்பி வைப்பதில் ஏற்பட்ட தாமதமே இதற்கு காரணம் என்று திரு. டி.டி.வி. தினகரன் இதற்கு குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்கு உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும் என்றும் திரு. டி.டி.வி. கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

பிரம்மாகுமாரிகள் அமைப்பின் 90வது ஆண்டு விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 90வது ஆண்டைக் குறிக்கும் வகையில் 90 முக்கிய பிரமுகர்கள் ஒரே நேரத்தில் குத்துவிளக்கை ஏற்றினர்.

இதில் பிரம்மாகுமாரிகள் அமைப்பை சேர்ந்த மகளிர் மற்றும் சட்டப்பேரவை தலைவர் திரு. ஜெ.சி.டி. பிரபாகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்குவது தொடர்பான உறுதிமொழி ஏற்பு நிகழ்வும் இதில் நடைபெற்றது.

<<<<>>>>

மேகதாது அணை விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அக்கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் பல்வேற இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளின் சில இடங்களில் நேற்றிரவு பரவலாக மழை பெய்தது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் நேற்று மிதமான பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Murugesan — 35 Sec)**

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

எத்தியோப்பிய நாடாளுமன்றத் தேர்தலில், அந்நாட்டு பிரதமர் திரு. அபி அகமது தலைமையிலான ஆளும் முன்னேற்றக் கட்சி அறுதிப்பெரும்பான்மையைத் தக்க வைத்துள்ளது.

-------------

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மத்தியப்பிரதேச மாநிலம் குனோ தேசிய பூங்காவில் சிறுத்தைகள் பராமரிப்புப் பகுதியைப் பார்வையிட்டார்.

-------------

மத்திய தொழிலக பாதுகாப்புப் படையின் புதிய கட்டடத்திற்கு புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

-------------

இந்தியக் கடற்படையின் போர்க்கப்பலான ஐஎன்எஸ் தர்காஷ், கடல் சார் ஒத்தழைப்புப் பயணத்தின் ஒரு பகுதியாக, நேற்று மொரிஷியஸில் உள்ள போர்ட் லூயிஸுக்குச் சென்றடைந்தது.

-------------

என்சிசி சார்பில் நாடு முழுவதும் நடைபெற்ற யோகா தின நிகழ்வுகளில் 8 லட்சத்து 30 ஆயிரம் பேர் பங்கேற்றதாக தேசிய மாணவர் படை தெரிவித்துள்ளது.

-------------

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 20 பேர் காயம் அடைந்தனர்.

-------------

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பார்வையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள வசதிகள் குறித்து மாநில அமைச்சர்கள் திரு. ரஞ்சித் குமார் மற்றும் திரு. சரத்குமார் ஆய்வு மேற்கொண்டனர்.

-------------

ஓமன் நாட்டின் கப்பலில் பணியில் இருந்தபோது உயிரிழந்த மாலுமி நிஷாந்தின் மனைவிக்கு தமிழக அரசின் இளநிலை உதவியாளர் பணிக்கான பணி நியமன ஆணையை மாநில அமைச்சர் திரு. ஸ்ரீநாத் தூத்துக்குடியில் வழங்கினார்.

-------------

சென்னை அடையாறு முகத்துவாரத்தில் தூர்வாரும் பணிகள் குறித்து மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. குமார் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

சென்னையில் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டிருந்த **16** விளம்பரப் பலகைகள் கடந்த இரண்டு நாட்களில் அகற்றப்பட்டு **2** லட்சத்து **10** ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-------------

உலக இசை தினத்தை முன்னிட்டு, சென்னை மாநகராட்சி சார்பில் பாண்டிபஜாரில் **15** மணி நேரம் நடைபெற்ற தொடர் இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற இசைக் கலைஞர்களை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் பாராட்டினார்.

-------------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா, நெதர்லாந்தை வென்றது.

ரோட்டர்டேமில் நடைபெற்ற இப்போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

லண்டனில் நாளை நடைபெற உள்ள போட்டியில் இந்தியா, பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

-------------

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா, இந்தியாவை வென்றது.

மான்செஸ்டரில் நடைபெற்ற இப்போட்டியில் தென்னாப்பிரிக்க அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**